بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

19 ஷஃபான் 1440 ஹிஜ்ரி கமரி 25 ஷஹாதத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
25 ஏப்ரல் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ يٰۤاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۭ بَيْنَنَا وَبَيْنَكُمْ اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ

நீர் கூறுவீராக! வேதத்தை உடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு வேறதெனையும் இணை வைக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ள மாட்டோம். (3:65)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

இஸ்லாமிய படை வீரர்களின் ஷஹாதத் தொடர்பான செய்தியை தெரிவித்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! மிகவும் வேதனைக்குரிய ஒரு செய்தியாகும். மூத்தா போருக்குச் சென்ற முஸ்லிம்கள் போர்க்களத்தில் எதிரிகளை நன்றாக எதிர்த்துப் போரிட்டார்கள். முதலில் படைத் தளபதில் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் ஷஹீதானார்கள். அப்போது இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் ஏந்தினார்கள். அவர்களும் மிகவும் உயிரை பணயம் வைத்து போரிட்டாடிரகள். நான் அவரை இறைவழியில் உயிரை தியாகம் செய்தவாறு கண்டேன். அதற்குப் பிறகு மூன்றாவது அமீராகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த படைத்தளபதிகளின் மஃபிரத்திற்காக துஆ செய்தார்கள். பிறகு அவர்களது நல்ல முடிவைப் பற்றிய செய்தியை தெரிவித்தவாறு, ஹஸ்ரத் ஜஃபர் (ரலி), ஹஸ்ரத் ஸைது (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோரைப் பற்றிய காட்சி எனக்குக் காட்டப்பட்டது. அவர்கள் மகத்தான ஒரு கண்ணாடி மாளிகைளில் இருக்கின்றனர். மேலும் அவர்களில் ஒவ்வொருவரும் தனித்தனி அரியணையில் அமர்ந்திருக்கிறார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது தொகுதி 5 பக்கம் 229, இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 314)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஷஹீதின் விதவைகளுக்கு ஆறுதல் கூறியவாறு, இந்த குழந்தைகளுக்கு பசி பட்டினிக்கான எண்ணத்தை உள்ளத்தில் வர விட வேண்டாம்; நான் இந்த உலகத்தில் மட்டும் அவர்களுக்கு பொறுப்பாளி அல்லன். மாறாக, மறு உலகத்திற்கும் நான் அவர்களின் நண்பனாகவும் பொறுப்பாளனாகவும் இருக்கின்றேன் என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது தொகுதி 1 பக்கம் 204)

ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மாமனார் ஆகவும், உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் சய்யிதா நுஸ்ரத் ஜஹான் சாஹிபா (ரலி) அவர்களின் தந்தை ஆகவும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பாட்டனாராகவும், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் முப்பாட்டனாராகவும் இருப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்கள், கி.பி 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தில்லியின் புகழ்பெற்ற சூஃபியாகவும் உருதுவின் மிகச்சிறந்த கவிஞருமாக திகழ்ந்த ஹஸ்ரத் காஜா மீர் தர்து (ரஹ்) அவர்களின் தந்தையாகிய ஹஸ்ரத் காஜா முஹம்மது நாஸிர் (ரஹ்) அவர்கள் தமது காலத்தின் முஜத்திதாக இருந்தார்கள். 1894 ஆம் ஆண்டு மர்தானிலிருந்து நீண்டு விடுப்பு எடுத்துக் கொண்டு காதியான் வந்தார்கள். பிறகு அவர்களுக்கு ஒய்வூதியம் கிடைத்தபோது காதியானிலேயே தங்கிவிட்டார்கள். தனது எல்லா திறமைகளையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காகவே அர்ப்பணித்து விட்டார்கள். மேலும் எவ்வித ஊதியமும் இன்றி தமது வாழ்வை ஜமாஅத்தின் தொண்டிற்காக அர்ப்பணித்து விட்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிலத்திற்கு அதிகாரம் பெற்றவர்களாகவும் திகழ்ந்தார்கள். பணத்தை வசூல் செய்பவர்களாகவும், கட்டடப் பணியின் பொறியாளராகவும் அன்னாரே திகழ்ந்தார்கள். வீட்டின் அனைத்துப் பணிகளையும் அன்னாரே பார்த்து வந்தார்கள். ஹுஸூர் அவர்கள் பயணங்களில் சென்றிருந்தபோதும் அன்னாரே விட்டுப் பணிகளை கவனித்து வந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்களின் கடைசி நாட்களின் பயணங்களிலும் அவர்களுடன் பயணம் செய்பவர்களாக இருந்து கொண்டு தொண்டாற்றினார்கள். ஆக, மீர் சாஹிப் காதியான் வந்து ஹுஸூர் (அலை) அவர்களுடைய விட்டின் விவகாரங்கள், சமுதாயத்தின் விவகாரங்கள் ஆகிய அனைத்திலும் தனிச் செயலராக ஆகி விட்டார்கள். அவர்கள் மீது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு முழுமையான நம்பிக்கை இருந்ததென்றால், 'மீர் சாஹிப் அவர்களின் பணிகளில் குறுக்கிடக் கூடாது' என்று அன்னார் கூறி வந்தார்கள்.

இந்த சொற்பொழிவிற்குப் பிறகு இரண்டாம் நாளின் முதல் அமர்வு முடிவுற்றது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இது மஸீஹின் நேரமே அன்றி வேறு ஒருவரது வருகையின் நேரமும் கிடையாது**
**நான் வரவில்லை என்றால் வேறு எவராவது வந்திருப்பார்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்: எனது ஏதாவதொரு வாதம் திருக்குர்ஆனுக்கு ஏற்ப இல்லையென்றால் பிறகு அதனை குப்பையில் எறிந்து விடுவேன்**

**எங்கு திருக்குர்ஆன் இருக்கிறதோ அங்குதான் நானும் இருப்பேன்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்களில் காலத்தின் நிலைமை, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் அவசியம், அன்னாரது வருகையினால் காலத்தின் சிறப்புத்தன்மை, அன்னார் தோன்றும் இடம், அன்னாரது வருகைக்கான சான்றுகள் மற்றும் உண்மையை அறிந்து கொள்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய வழிகாட்டல்கள் மேலும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல்வேறு சம்பங்கள்**

**கிலாஃபத் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்த, நேர்மை மற்றும் கலப்பற்றத்தன்மையை கொண்டிருந்த கண்ணியத்திற்குரிய மவ்லானா குர்ஷித் அஹ்மது அன்வர் சாஹிப் (வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது அஞ்ஜுமன் அஹ்மதிய்யா காதியான்) மற்றும் மதிப்பிற்குரிய தாஹிர் ஹுஸைன் முன்ஷி சாஹிப் (நாயிப் அமீர் ஃபிஜி) மற்றும் மாலியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மூஸா ஸிஸ்கோ சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22 மார்ச் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நாளை மார்ச் 23 ஆம் தேதியாகும். இந்த நாளை மஸீஹே மவ்வூது தினம் என்ற அடிப்படையில் ஜமாஅத்தில் நினைவு கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப எந்த மஸீஹ் மஹ்தி இறுதி காலத்தில் தோன்றி இஸ்லாத்தின் உண்மையான போதனையை தெரிவிக்க வேண்டியதிருந்ததோ, பரப்ப வேண்டியதிருந்ததோ மேலும் முஸ்லிம்களை ஒரு கையில் ஒன்று சேர்க்க வேண்டியதிருந்ததோ மாறாக, அனைத்து மார்க்கத்தைச் சார்ந்தவர்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக ஆக்க வேண்டியதிருந்ததோ அதைப் பற்றிய அறிவிப்பே இந்த தேதியில் செய்யப்பட்டது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி நானே ஆவேன் என்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்தார்கள்.

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அதில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் அவசியம் என்ன? காலத்தின் தேவை என்ன? மற்றும் தமது வாதத்தைப் பற்றியும், இது தொடர்பான பல்வேறு அடையாளங்களைப் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அன்னார் தமது ஓர் கவிதையில் கூறுகின்றார்கள்:

**இது மஸீஹின் நேரமே அன்றி வேறு ஒருவரது வருகையின் நேரமும் கிடையாது**

**நான் வரவில்லை என்றால் வேறு எவராவது வந்திருப்பார்**

(துர்ரே ஸமீன் பக்கம் 160)

ஆக காலத்தின் நிலைமையானது, எவராவது வந்து மூழ்குகின்ற கப்பலை பாதுகாக்க வேண்டும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் துர்பாக்கிய நிலை என்னவென்றால், ஒரு மஸீஹ் வர வேண்டும் என்று மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்த பெரும்பான்மையான முஸ்லிம் ஆலிம்கள் அன்னாரது வாதத்திற்குப் பிறகு அன்னாரை எதிர்த்தார்கள்.

மேலும் பொய்யான கதைகளைக் கூறி, பொய்யான விஷயங்களை அன்னார் மீது இட்டுக்கட்டி எந்த அளவுக்கு பொது மக்களைத் தூண்டினார்கள் என்றால் கொலை செய்வதற்கான மார்க்கத் தீர்ப்பு வழங்கினர். மாறாக இன்று வரை பல்வேறு இடங்களிலும், நாடுகளிலும் அநீதியின் உச்சத்தை எட்டியவாறு கொலை மற்றும் அநீதியின் எத்தகைய முன்னுதாரணத்தை நிலைநாட்டுகின்றார்கள் அல்லது நிலைநாட்டியுள்ளார்கள் என்றால் இவை அனைத்து இஸ்லாத்தின் பெயரால் செய்யப்பட்டுள்ளது. இஸ்லாம் பற்றிய உண்மையை அறிந்திருக்கக் கூடியவர்கள் இவற்றைப் பற்றி ஒருபோதும் சிந்தித்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள். மேலும் அவர்கள் மூலமாக இத்தகைய செயல்களும் வெளிப்பட்டிருக்காது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், காலத்தின் நிலைமைகள் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவது தொடர்பாக கூறியுள்ள எவ்வாறு பல்வேறு கூற்றுக்களை நாம் பார்க்கின்றோம்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவதன் அவசியம் என்ன? மேலும் மஸீஹிக்கு இக்காலத்துடன் என்ன சிறப்புத்தன்மை இருக்கிறது? என்பதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அன்னார், நானே வரக் கூடியவனாக இருக்கின்றேன் என்று கூறவில்லை. மாறாக, ஒருவர் வர வேண்டும் என்பதை காலம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் இஸ்ராயீல் மற்றும் இஸ்மாயீல் ஆகிய இரு தொடரிலும் கிலாபத் தொடர்பான ஒப்புமையை இறைவன் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டியுள்ளான். அதாவது,

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ (24:56)

என்ற இந்த வசனத்திலிருந்து இது தெரிய வருகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்ராயீல் தொடரில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு 14 வது நூற்றாண்டின் இறுதியில் இறுதி கலீஃபாவாக வந்தவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வந்தார்கள். அவ்வாறே இந்த உம்மத்தின் மஸீஹும் 14 வது நூற்றாண்டின் இறுதியில் வர வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமின்றி எவர்களுக்கு இறைவனுடன் குறிப்பான தொடர்பு இருந்ததோ அதாவது கஷ்ஃப் பார்க்கக் கூடியவர்களும் இந்த காலகட்டத்தை மஸீஹ் தோன்றுவதற்கான காலமாக குறிப்பிட்டுள்ளார்கள். இதுபோன்று பல சான்றோர்கள் கூறியுள்ளார்கள். உதாரணமாக, ஷா வலியுல்லாஹ் சாஹிப் போன்றோர்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: மஸீஹின் வருகை தொடர்பான அடையாளங்களில் சிறிய அடையாளங்கள் முழுவதும், பெரிய அடையாளங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிலும் முழுமையடைந்து விட்டன என்று அஹ்லே ஹதீஸைச் சார்ந்தவர்களும் கருதுகின்றனர். ஆனால் இதில் இவர்களது தவறு சிறிது இருக்கத்தான் செய்கின்றது. ஏனென்றால் அனைத்து அடையாளங்களும் முழுமையடைந்து விட்டதேயொழிய ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் அல்ல. மாறாக மஸீஹின் வருகை தொடர்பான அனைத்து அடையாளங்களும் முழுமையாகி விட்டன.

அன்னார் கூறுகின்றார்கள்: வரக் கூடியவர் தொடர்பான புகாரியில் மிகப்பெரிய அடையாளமாக அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார் என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது மஸீஹ் இறங்கக் கூடிய நேரத்தில் கிறித்துவ மற்றும் சிலுவையின் ஆதிக்கம் இருக்கும். ஆக இது அந்த நேரம் இல்லையா?

பாதிரிமார்கள் மூலமாக இஸ்லாத்திற்கு எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதோ அதைப் போன்ற உதாரணத்தை ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து இன்று வரை பார்க்க முடிந்திருக்கின்றதா? ஒவ்வொரு நாட்டில் பரிவினை ஏற்பட்டு விட்டது. எந்தவொரு இஸ்லாமிய குடும்பத்திலிருந்தும் ஒன்றிரண்டு நபர்கள் இவர்களது கைகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கவில்லை. ஆக வரக்கூடியவர் சிலுவை ஆதிக்கத்தின் வெற்றியின் நேரத்தில் வருவார். இதைவிட வேறு என்ன வெற்றி இருக்கும்? எந்த அளவுக்கு காட்டுமிராண்டித்தனமான முறையில் இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது?

அன்னார் மீது அன்னார் ஆங்கிலேயர்களின் கைக்கூலி என்ற ஆட்சேபணை வைக்கப்படுகின்றது. ஆனால் அன்னார் ஆங்கிலேயர்களின் கைக்கூலியா? அல்லது இஸ்லாத்தை தற்காப்பிதற்காகவும், அதன் மேன்மையை நிரூபிப்பதற்காகவும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கின்றார்களா? என்பதற்கு இந்த சொற்களே விளக்கம் தருபவைகளாக இருக்கின்றது.

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்:

எதிர்ப்பாளர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி மிகவும் அசுத்தமான மற்றும் தீய சொற்களில் நினைவு கூறாத எந்த கூட்டமாவது இருக்கின்றதா? இப்போது வரக்கூடியவரின் நேரம் இது அல்ல என்றாலும், பிறகு அவர் வெகு விரைவில் வந்தாலும் 100 வருடத்திற்குள் வருவார். ஏனென்றால் அவர் காலத்தின் முஜத்தித் ஆவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருக்கும். ஆக முஸ்லிம்களிடம் இன்னும் ஒரு நூற்றாண்டு வரை பாதிரிமார்களின் ஒவ்வொரு நாள் முன்னேற்றத்திற்கு எதிரில் போட்டியிடும் ஆற்றல் இருக்கின்றதா? வெற்றி எல்லையை எட்டி விட்டது. ஆனால் வரக்கூடியவர் வந்து விட்டார். அவர் அத்தாட்சிகளை பூர்த்தி செய்வதன் மூலமாக தஜ்ஜாலை அழிப்பார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 47,48)

வரக்கூடிய மஸீஹின் மூலமாகவே அனைத்து மார்க்கங்களின் மீதும் சான்றுகள் மற்றும் வலுவான ஆதாரங்கள் மூலமாக இஸ்லாத்தின் மேன்மை நிரூபிக்கப்பட வேண்டியதிருந்தது. மேலும் இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிப்பதற்காக ஒவ்வொரு மார்க்கத்திற்கு முன்பாகவும் அவர் வேண்டியதிருந்தது. ஆயிரக்கணக்கான முஸ்லிமல்லாதவர்கள் ஒவ்வொரு வருடமும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றனர். அவர்கள் அன்னார் வழங்கிய ஆதாரங்கள் மற்றும் வலுவான சான்றுகளின் காரணமாகவே இணைகின்றனர்.

பிறகு காலத்தின் நிலைமை மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் அவசியம் தொடர்பாக மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:

நிலம் தகுதியானதாக இருக்கவில்லை என்றால் மழையினால் அதற்கு எந்த பயனும் இருப்பதில்லை. மாறாக, அதனால் தீமையும், நஷ்டமுமே ஏற்படுகிறது. அதாவது காய்ந்த, வரண்ட நிலமாக இருந்தால் அதனால் நஷ்டமே ஏற்படும். எனவே வானத்தின் ஒளி இறங்கியுள்ளது. அது உள்ளத்தை ஒளிமிக்கதாக ஆக்க விரும்புகின்றது. இதனை ஏற்றுக் கொள்ளவும், இதிலிருந்து பயனடையவும் ஆயத்தமாகுங்கள்.

அதாவது உங்களது உள்ளம் என்ற நிலத்தை இதற்கு தகுதிவாய்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். அதுவன்றி மழை பெய்தும் வரண்ட நிலம் அதனால் எவ்வித பயனையும் பெறாமல் அதை வீணாக்கி விடுகின்றதோ அதுபோன்று நீங்களும் ஒளி இருந்தும் இருளில் சென்று தடுமாறி கீழே விழுந்து அழிந்து விடாதீர்கள். அல்லாஹ் உங்களது நிலையை இவ்வாறு ஆக்காமல் இருப்பானாக.

அன்னார் கூறுகின்றார்கள்: பாசமுள்ள தாயைவிட அல்லாஹ் மிகுந்த கருணை காட்டக் கூடியவனாவான். அவனது படைப்பினம் அழிவிற்குள்ளாக வேண்டும் என்பதை அவன் விரும்புவதில்லை. அவன் நேர்வழி மற்றும் பிரகாசமான ஒளியின் வழியை உங்களுக்காக திறக்கின்றான். ஆனால் அறிவு மற்றும் உள்ளங்களை சீர்திருத்துவதன் மூலமாக நீங்கள் அதில் அடியெடுத்து வையுங்கள். எப்போது வரை நிலத்தை உழுவதன் மூலம் தயார் செய்யப்படவில்லையோ அதுவரை அதில் விதையை விதைக்க முடியாது. அவ்வாறே உங்களது முயற்சிகள் மூலமாக உள்ளங்கள் தூய்மையடையவில்லை என்றால் தூய்மையான அறிவு வானத்திலிருந்து இறங்க முடியாது.

இந்த காலத்தில் இறைவன் மிகப்பெரும் அருள் செய்துள்ளான். தனது மார்க்கம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப்படுத்துவதற்காக தன்மான உணர்வினால், அவர் இந்த ஒளியின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும் என்பதற்காக உங்களிலிருந்து ஒருவரை அவன் அனுப்பியுள்ளான். இக்காலத்தில் இத்தகைய குழப்பங்கள் ஏற்பட்டிருக்கவில்லையென்றால், மார்க்கத்தை ஒழித்துக் கட்ட எத்தகைய முயற்சிகள் செய்யப்படுகின்றேதா அந்த முயற்சிகள் செய்யப்படவில்லையென்றால் பிறகு ஒன்றுமில்லைதான்.

ஆனால், இப்போது நீங்கள் பார்க்கின்றீர்கள். நாலாப்புறத்திலிருந்தும் இஸ்லாத்தை ஒழித்துக் கட்டுவதற்கு மக்கள் கவலையில் மூழ்கியுள்ளனர். வலது புறத்திலிருந்தும், இடது புறத்திலிருந்தும் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. அனைத்து மார்க்கங்களும் இதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. அனைத்து சமுதாயங்களும் இந்த முயற்சியிலேயே மூழ்கியிருக்கின்றன. இன்று வரை ஏதாவதொரு வகையில் இதே நிலைதான் இருக்கின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் இருக்கின்றது. நான் பராஹீனே அஹ்மதிய்யாவிலும் இதைக் குறிப்பிட்டுள்ளேன். இஸ்லாத்திற்கெதிராக ஆறு கோடி புத்தகங்களும், கட்டுரைகளும்

எழுதப்பட்டுள்ளன. (இது இன்றிலிருந்து 125 வருடத்திற்கு மாறாக, 150 வருடத்திற்கு முன்னுள்ள அன்னாரது காலத்திலுள்ள விஷயமாகும்)

அன்னார் கூறுகின்றார்கள்: இது மிகவும் வியக்கத்தக்க விஷயமாகும். அதாவது இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கையும் ஆறு கோடி ஆகும். அதேபோன்று இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கையும் அதே எண்ணிக்கையில் இருக்கிறது. அன்றைய காலத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 6 கோடியாக இருந்தது. ஆனால் தற்போது 50, 60 கோடி இன்னும் சொல்வதென்றால் அதை விட அதிகமாகவே இருக்கின்றனர். இஸ்லாத்தின் எதிரிகள் ஒவ்வொரு முஸ்லிமிற்கும் ஒரு நூலை வழங்கியுள்ளார்கள். எந்த அளவுக்கு முஸ்லிம்கள் இருக்கின்றார்களோ அதே எண்ணிக்கையில் புத்தகங்களும் எழுதப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு வழிமுறைகள் மூலமாகவும், மின்னணு ஊடகங்கள், இணையதளம் போன்றவற்றின் மூலமாகவும் இந்தப் பணி இதை விட அதிகமாகி விட்டது. புதிய புதிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்தியாவிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் கையிலும் அவர்கள் ஒரு நூலை வழங்கியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனின் தன்மான உணர்வு பொங்கி எழவில்லை என்றால், மேலும் இன்னா லஹூ லஹாபிலூன் என்ற அவனது வாக்குறுதி வெளிப்படவில்லை என்றால் பிறகு நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். இன்று இஸ்லாம் உலகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கும். மேலும் அதன் பெயரும் அடையாளமும் கூட அழிந்திருக்கும். ஆனால் அவ்வாறில்லை; ஒருபோதும் அவ்வாறு நடப்பது சாத்திமல்ல. இறைவனது மறைவான கை அதனை பாதுகாத்து வருகின்றது.

எனக்கு வருத்தம் மற்றும் துன்பம் இதனாலேயே ஏற்படுகின்றது. அதாவது மக்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொண்டு திருமணத்திற்கு எந்த அளவுக்கு கவலை கொள்கின்றார்களோ அந்த அளவுக்கு கூட மார்க்கத்திற்காக கவலை கொள்வதில்லை. எனக்கு பல முறை படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதாவது கிறித்தவ பெண்கள் கூட மரணிக்கும்போது கிறித்துவ மார்க்கத்தை பிரச்சாரம் செய்வதற்காகவும், பரப்புவதற்காகவும் லட்சக்கணக்கான ரூபாயை உயிர் எழுதி விட்டு சென்று விடுகின்றனர்.

அந்த காலத்தில் மார்க்கத்தின் பக்கம் கிறித்துவ பெண்களுக்கு கவனம் இருந்தது. எனவே அவர்கள் மார்க்கத்திற்காக தியாகம் செய்து வந்தனர். மேலும் அவர்களது வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் மார்க்கத்திற்காக செலவு செய்வதையும் நாம் பார்க்கின்றோம். அந்த காலத்தைப் பற்றி அன்னார் படம்பிடித்துக் காட்டுகின்றார்கள். அதாவது ஆயிரக்கணக்கான பெண்கள், மிஷனெரிகள் வீதிகளில் சுற்றித் திரிகின்றனர். கிறிஸ்தவ பெண்கள் தப்லீக் செய்து சுற்றித் திரிகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆனால் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக 50 ரூபாயை உயிலாக எழுதி வைத்து விட்டு சென்றதாக ஒருவரைக்கூட நான் பார்த்ததில்லை. ஆனால் திருமணத்திற்காகவும், உலக சடங்கு சம்பிரதாயத்திற்காகவும் வீண் செலவுகள் செய்யப்படுகின்றது. இவ்வாறான செலவுகள் இன்றும் செய்யப்படுகின்றன. இஸ்லாத்திற்காக பெயரளவில் அவர்கள் செலவு செய்பவை உலகத்திற்காக அவர்கள் செலவு செய்வதை ஒப்பிடும்போது ஒன்றுமேயில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: கடன் வாங்கியாவது வீணான செலவுகளை செய்கின்றனர். ஆனால் இஸ்லாத்திற்காக செலவு செய்வதில்லை. மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். இதைவிட முஸ்லிம்களுக்கு வருத்தத்திற்குரிய விஷயம் வேறு என்னவாக இருக்க முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 72–74)

முஸ்லிம்களில் பெரும்பான்மையினரின் நிலை இன்றும் இவ்வாறே இருக்கிறது. சில இடங்களில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நான் கூறியது போன்று உலகத்திற்காக எந்த அளவுக்கு செலவு செய்யப்படுகிறதோ அதை ஒப்பிடும்போது மார்க்கத்திற்காக செலவு செய்வது மிக மிக குறைவுதான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது இந்த நிலைமைதான் இருந்தது. நான் கூறியது போன்று இப்போது முஸ்லிம்களின் ஒரு சாராருக்கு கவனம் ஏற்பட்டுள்ளது. அது இந்த அளவுக்கு மட்டும் தான் அவர்களுக்கு கவனம் ஏற்பட்டுள்ளது. அதாவது அவர்கள் இஸ்லாத்தில் நிலைத்திருக்க விரும்புகின்றார்கள். சுயமே பள்ளிவாசலை கட்டியுள்ளனர்.

ஆனால் இஸ்லாத்தின் போதனையை பரப்புவதற்காக இவர்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. பெயரளவில் அவர்கள் ஏதேனும் முயற்சி செய்கின்றார்கள் என்றால் அதுவும் தீவிரவாத செயல்களாகவே இருக்கிறது. அதாவது வலுக்கட்டாயமாக நாங்கள் இஸ்லாத்தைப் பரப்புவோம் என்று கூறி பல்வேறு அமைப்புகள் இவ்வாறு உருவாகி இருக்கின்றது. அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் மற்றும் அன்னாரது ஜமாஅத்திற்கெதிராக முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஆக, எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். இனி இஸ்லாம் உலகில் பரவ வேண்டும் என்றால் அது அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இந்த தூதரின் மூலமாகவே பரவ முடியும். இது இறை நியதியாகும்.

வரக்கூடிய இமாம் மஹ்தி தொடர்பாக அல்லாஹ்வும் அவனது ரஸூலும் சில அடையாளங்களையும் கூறியுள்ளார்கள். வரக்கூடியவர் எந்தவொரு அடையாளமும் இன்றி வாதம் செய்ய மாட்டார். இதுதொடர்பாக எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

வரக்கூடியவருக்கு ஓர் அடையாளமும் உள்ளது. அந்த காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் கிரகணம் ஏற்படும். அல்லாஹ்வின் அடையாளங்கள் மீது எள்ளிநகையாடுபவர்கள் இறைவன் மீது எள்ளிநகையாடுகின்றனர். சந்திர, சூரிய கிரணமானது வாதத்திற்குப் பிறகு வெளிப்பட்டிருப்பது பொய் மற்றும் சுயமே நடைபெறுவதல் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதாகும். இதனை பொய் என்று கூற முடியாது. சுயமே நடைபெற்றது என்றும் கூற முடியாது. இதனை ஏமாற்றுதல் என்றும் கூற முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: இதற்கு முன்பு எந்த சந்திர, சூரிய கிரகணமும் இவ்வாறு ஏற்படவில்லை. இது எத்தகைய அடையாளம் என்றால் இதன் மூலமாக இறைவன் முழு உலகத்திலும் வரக் கூடியவர் தொடர்பாக அறிவிக்க வேண்டியதிருந்தது. அரபு நாட்டைச் சார்ந்தவர்கள் கூட இந்த அடையாளத்தைப் பார்த்து தமது இயல்பிற்கேற்ப இதனை சரி என்று கூறினர். நமது பிரசுரங்கள் நமது செய்திகளை எங்கெல்லாம் கொண்டு செல்ல முடியாமல் இருந்ததோ அங்கெல்லாம் இந்த சந்திர, சூரிய கிரணமானது வரக்கூடியவர் தொடர்பான அறிவிப்பைச் செய்தது. இது இறைவனது அடையாளமாகும். இது மனித திட்டங்களிலிருந்து மிகவும் தூய்மையானதாகும்.

எத்தகைய தத்துவவாதியாக இருந்தாலும் அவர் சிந்தித்துப் பார்த்தால், அதாவது நிர்ணயிக்கப்பட்ட அந்த கிரகணம் நிறைவேறி விட்டது என்றால் பிறகு வாதம் செய்யக் கூடியவரும் எங்கேயோ இருக்கிறார் என்பது தெரிய வரும். மேலும் இந்த விஷயம் ஒரு கணக்கின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல. மாறாக, இது எந்த சந்தர்ப்பத்தில் நிகழும் என்றால் அப்போது வாதம் செய்யக் கூடியவர் மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற வாதத்தை செய்திருப்பார். அப்போது இந்த அடையாளம் வெளிப்படும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இதையும் கூறினார்கள்: ஆதமிலிருந்து அந்த மஸீஹ் வரை

இப்படிப்பட்ட எந்த சம்பவமும் நிகழ்ந்தது கிடையாது. எவராவது ஒருவர் வரலாற்றிலிருந்து அவ்வாறு நிகழ்ந்திருக்கிறது என்று நிரூபித்தால் நாம் ஏற்றுக் கொள்வோம்.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 48,49)**

பிறகு அன்னார் கூறினார்கள்: இன்னொரு அடையாளம் வாள் நட்சத்திரம் வெளிப்படும் என்பதாகும். நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்த நட்சத்திரம் வெளிப்பட்டது. அதாவது மஸீஹ் நாஸிரியின் காலத்தில் வெளிப்பட்ட அந்த நட்சத்திரம் வெளிப்படும். அது வெளிப்பட்டும் விட்டது. இந்த நட்சத்திரமான யஸூஸ் மஸீஹிற்கு வானத்திலிருந்து அறிவித்துக் கொடுத்தது. அவ்வாறே திருக்குர்ஆனில்

وَاِذَا الْبِحَارُ سُجِّرَتْ ۝٧ وَاِذَا النُّفُوْسُ زُوِّجَتْ ۝٨

وَاِذَا الْعِشَارُ عُطِّلَتْ ۝٥ وَاِذَا الْوُحُوْشُ حُشِرَتْ ۝٦

وَاِذَا الْمَوْءٗدَةُ سُئِلَتْ ۝٩ بِاَيِّ ذَنْۢبٍ قُتِلَتْ ۝١٠ وَاِذَا الصُّحُفُ نُشِرَتْ ۝١١

இதற்கு பல பொருள்கள் இருக்கின்றன. அதாவது விலங்குகள் ஒன்று சேர்க்கப்படும். கல்வி பொதுவானதாகி முழு உலகிலும் பரவி விட்டது. மேலும் சில உள்ளூர் மக்களை சில சமுதயாத்தைச் சார்ந்தவர்கள் தாக்குதல் நடத்தி அழித்து விட்டனர். பிறகு கடல்கள் ஒன்றிணைக்கப்படுவது தொடர்பாகவும், (பல்வேறு இன) மக்கள் ஒன்று சேர்க்கப்படுவது தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது. இப்போது தொடர்பு கொள்வதற்கு மிக எளிய வழிகள் வந்து விட்டன. இப்போது ஒரு நொடியில் உலகத்தில் எங்கிருந்தாலும் தொடர்புகள் ஏற்பட்டு விடுகின்றன. பிறகு பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வந்தன. அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்தது. அவர்களைக் கொலை செய்து வந்தனர்.

ஆனால் அந்தப் பெண் எந்த குற்றத்திற்காக என்னைக் கொலை செய்கின்றீர்கள்? என்று கேள்வி கேட்பாள் என்று வருகிறது. புத்தகங்கள் அச்சிட்டு பரப்பப்படும். பிரஸ், மீடியா போன்ற இவை அனைத்தும் இந்த காலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலம் என்பதை நிரூபிக்கின்றது. மேலும் திருக்குர்ஆனில் இதற்கான முன்னறிவிப்பு இருக்கின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த காலத்தில் ஒட்டகங்கள் கைவிடப்படும். மேலும் அந்த காலத்தில் பயணத்திற்கான வசதிகள் எந்த அளவுக்கு சிறந்ததாக இருக்குமென்றால் ஒட்டகங்கள் போன்ற வாகனங்கள் எல்லாம் கைவிடப்படும். இதிலிருந்து இரயிலின் காலம் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது. இப்போது நாம் பார்க்கின்றோம். தற்போது இரயில் மக்காவிலிருந்து மதீனாவிற்கு கூட செல்கின்றது. அல்லது இரயில் தளவாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அன்னார் கூறுகின்றார்கள்: எந்த மக்கள் இந்த வசனங்கள் கியாமத்தோடு தொடர்புடையவை என்று கருதுகிறார்களோ அவர்கள் ஒட்டங்கள் கியாமத் நாளில் எவ்வாறு கருவுற்று இருக்கும் என்பதை சிந்திப்பதில்லை. ஏனென்றால் இஷார் என்பதற்கு கருவுற்ற ஒட்டகம் என்று பொருள்படும். பிறகு அந்த நேரத்தில் நாலாபுறத்திலிருந்து கடல்கள் ஒன்று சேர்க்கப்படும். புத்தகங்கள் அதிகம் அதிகமாக அச்சிடப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. ஆக இந்த அனைத்து அடையாளங்களும் இக்காலத்துடன் தொடர்புடையதாகும்.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 49,50)**

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் எங்கு தோன்ற வேண்டும்? என்பது தொடர்பாக மேலும் ஆதாரத்தை வழங்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

இப்போது அவர் எங்கு தோன்றுவார் என்ற கேள்வி எஞ்சியுள்ளது. ஆக நினைவில் கொள்ள வேண்டும். தஜ்ஜால் கிழக்குப் பகுதியில் தோன்றுவான் என்று கூறப்பட்டுள்ளது. அது நமது நாட்டையே குறிக்கும்.

சாஹிபே ஹிஜஜுல் கராமா எழுதியுள்ளார்கள்: தஜ்ஜாலின் குழப்பம் இந்தியாவில் ஏற்பட்டுள்ளது. ஆக இதிலிருந்து மஸீஹ் தோன்றுவதும் தஜ்ஜால் தோன்றிய இடத்திலேயே நடைபெறும் என்பது வெளிப்படையாகும். பிறகு தஜ்ஜான் தோன்றும் ஊரின் பெயர் கத்ஆ என்று கூறப்பட்டுள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: எகிப்திருக்கு அருகிலும் இதே பெயரில் ஏதாவதொரு ஊர் இருக்கலாம். ஆனால் இதை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது எகிப்து நாடு ஹஜாஸிலிருந்து கிழக்குப் பகுதியில் கிடையாது. மாறாக, தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது மட்டுமின்றி இறைநியதியானது இந்த எளியவனின் பெயரையும் நுட்பமான ஞானத்துடன் வைத்துள்ளது. அதாவது குலாம் அஹ்மது காதியானி என்ற பெயரிலுள்ள எண்ணிக்கையில் ஜுமுல் கணக்கின்படி சரியாக 1300 வருகின்றது. அதாவது அப்ஜத் கணக்கின்படி 1300 வருகின்றது. எனவே இந்த பெயரைக் கொண்ட இமாம் 14 வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றுவார். ஆக பெருமானார் (ஸல்) அவர்கள் இதன் பக்கமே சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 50)**

அடையாளங்கள் தொடர்பான அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்: பேரழிவுகளும் ஓர் அடையாமாகும். பல்வேறு வகையான பேரழிவுகள் ஏற்படும்.

அன்னார் கூறுகின்றார்கள்: விண்ணின் அழிவுகள் பஞ்சம், பிளேக் ஆகியவை மூலம் வெளிப்பட்டுள்ளது. பிளேக் நோயானது மிகக் கடுமையான நோயாகும். இந்நோய் அரசாங்கத்தை கூட உலுக்கி விட்டது. அன்றைய காலத்தில் இது ஐந்து, ஆறு வருடங்கள் வரை இருந்தது. மிகவும் அச்சமூட்டக்கூடிய அழிவை ஏற்படுத்தியது. அது மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றால் நாடே துடைக்கப்பட்டு விடும். அவ்வளவு வேகமாக அது பரவிக் கொண்டிருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: பூமியில் ஏற்பட்ட அழிவானது, சண்டை, பூகம்பங்கள் ஆகியவை நாடுகளையே அழித்து விட்டன. பூமியில் நடக்கின்ற சண்டைகள் இன்றும் அவ்வாறே நடந்து கொண்டிருக்கின்றது. இறைவன் புறமிருந்து வரக்கூடியவருக்கு இதுவும் அவசியமாகும். அதாவது அவர் தனக்கு ஆதாரமாக வானத்தின் அடையாளத்தை காட்ட வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: லேக்கராமின் அடையாளம் என்ன ஒரு சாதாரண அடையாளமா? வல வருடங்கள் வரை மல்யுத்தம் போன்று இது நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஐந்து வருடங்கள் வரை இந்த சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரு தரப்பினரும் இது தொடர்பான செய்திகளை வெளியிட்டனர். இது பொதுவாக பரபல்யமாகி இருந்தது. லேக்கராமிற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹுடன் போட்டி நடைபெறுகின்றது என்ற சம்பவம் நாலாபுறமும் பிரபல்யமாகி இருந்தது. எந்த அளவுக்கு பிரபல்யமாகி இருந்தது என்றால் அதற்கான உதாரணத்தை மிகக் குறைவாகவே பார்க்க முடியும். இதைப் போன்ற வேறொரு சம்பவத்திற்கான உதாரணம் இருக்கின்றதா? என்றே கேட்கப்பட்டது.

அவ்வாறே சர்வ சமய மாநாடு தொடர்பாக பல நாட்களுக்கு முன்பாகவே எனது கட்டுரை எல்லா கட்டுரைகளையும் விட உயர்வானதாக இருககும் என்று கூறப்பட்டது. எந்த மக்கள் இந்த மகத்துவமிக்க மாநாட்டை க் கண்டார்களோ அவர்கள் சுயமே இதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க முடியும். இத்தகைய செய்தியைக் கூறுவது என்பது சாதாரண மனித அறிவுக்கு உட்பட்ட விஷயமா? ஆனால் எவ்வாறு கூறப்பட்டதோ அவ்வாறே நடந்தது.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 50,51)**

அது அன்னாரது இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற புத்தகம் தொடர்பானதாகும். இது தொடர்பான அன்றைய காலத்தின் பத்திரிகையான ஜனரல் கோஹர் ஆஸஃபி கல்கத்தா இது பற்றி எழுதியுள்ளது. அதனை நான் படிக்கின்றேன். அது இவ்வாறு எழுதியுள்ளது. அதாவது இந்த மாநாட்டில் மிர்ஸா சாஹிபின் கட்டுரை இருக்கவில்லையென்றால் மாற்று மதத்தவர்களுக்கு எதிரில் இஸ்லாத்திற்கு மிகப்பெரும் அவமானம் ஏற்பட்டிருக்கும். ஆனால் இறைவனது மிகச்சிறந்த கைகள் அருளுக்குரிய இஸ்லாத்தை விழுவதிலிருந்து பாதுகாத்து விட்டது. மேலும் இஸ்லாத்திற்கு இந்த கட்டுரையின் மூலமாக எத்தகைய வெற்றியை வழங்கினான் என்றால் எதிரிகள் கூட இந்த கட்டுரை அனைத்து கட்டுரைகளையும் விட உயர்வானதாக இருககும் என்று கூறினர்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 572)

இதை ஓர் அஹ்மதி எழுதவில்லை. வேறொருவர் எழுதியுள்ளார். இதுபோன்று பல பத்திரிகைகள் எழுதியுள்ளன.

பிறகு அன்னார் இறைவன் புறமிருந்து வந்ததற்கான சான்றுகளை எடுத்தக் கூறியவாறு மேலும் கூறுகின்றார்கள்:

நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன் என்பதற்கு இப்போது பல சான்றுகள் இருக்கின்றன. ஒன்று, உட்புற சான்றுகள். மற்றொன்று வெளிப்புற சான்றுகள். மூன்றவாதாக, நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றுவார் என்ற நம்பத்தகுந்த நபிமொழி. நான்காவதாக, إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்ற பாதுகாப்பிற்கான இறை வாக்குறுதி. ஐந்தாவதாக மிகக் சிறந்த ஆதாரத்தை நான் எடுத்து வைக்கின்றேன். அதாவது அது சூரா நூரில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்திஹ்லாஃப் வசனமாகும். அதில் அல்லாஹ் கூறுகின்றான். இதற்கு முன்பும் எடுத்துக் கூறினேன்.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ

இந்த வசனத்திற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்தில் தோன்றக்கூடிய கலீஃபாக்கள் அவர்கள் முந்தைய கலீஃபாக்களைப் போன்று இருப்பார்கள்.

இதே போன்று திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூஸாவிற்கு ஒப்புமையாக கூறப்பட்டுள்ளது.

اِنَّآ اَرْسَلْنَآ اِلَيْكُمْ رَسُوْلًا شَاهِدًا عَلَيْكُمْ كَمَآ اَرْسَلْنَآ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا

இந்த ஒப்புமையில் எவ்வாறு இந்த வசனத்தில் கமா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வாறே இஸ்திஹ்லாஃப் வசனத்திலும் கமா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து மூஸாவின் தொடருக்கும் முஹம்மதிய்ய தொடருக்கும் ஒப்புமை இருப்பது நிரூபணமாகின்றது. மூஸாவின் தொடரின் முடிவு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் முடிவடைந்தது.

மேலும் அவர்கள் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு 14 வது நூற்றாண்டில் வந்தார்கள். இந்த ஒப்புமைக்கேற்ப குறைந்தது 14 வது நூற்றாண்டில் மஸீஹிற்கு ஒப்பான ஒரு கலீஃபா தோன்ற வேண்டியது அவசியமாகும்.

ஆக, இதற்காக வேறொரு சான்றுகளை முன் வைக்கவில்லை என்றாலும் இந்த தொடரின் ஒப்புமை 14 வது நூற்றாண்டில் அன்னார் (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்து ஒருவர் அன்னாரது நிழலாக தோன்ற வேண்டும் என்பது வெளிப்படையாகும். இவ்வாறில்லையென்றால் அன்னார் தொடர்பான இந்த ஒப்புமையில் ஒரு குறைபாடே நிரூபணமாகும்.

ஆனால் அல்லாஹ் இந்த ஒப்புமையை முன்மொழிந்தது மட்டுமின்றி மூஸாவிற்கு ஒப்பானவர் மூஸாவை விடவும், அனைத்து நபிமார்களை விடவும் சிறந்தவர் என்பதையும் நிரூபித்துக் காட்டினான். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களை விடவும் மேலானவர்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் எந்த ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, தவ்ராத்தை முழுமை செய்வதற்காக வந்தார்கள். அவ்வாறே முஹம்மதிய்ய உம்மத்தின் மஸீஹும் தனக்கென்று எந்த ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, திருக்குர்ஆனை உயிர்ப்பிப்பதற்காகவும், அதன் போதனைகளை பரப்புவதற்காகவுமே வந்தார். மேலும் அவர் நேர்வழியை பரப்புவதை முழுமை செய்வதற்காகவே வந்தார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 9,10)

பிறகு அன்னார் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: நேர்வழியை பரப்புவதை முழுமையாக்குவது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் மீது மார்க்கம் பூர்த்தியானது. அருட்கொடைகள் பூர்த்தியாகின. அதற்கு இரண்டு வழிகளாகும். ஒன்று, நேர்வழியை முழுமை செய்தல் என்பதாகும். இரண்டாவது, நேர்வழியை பரப்புவதை முழுமை செய்வது ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நேர்வழி முழுமை பெறுதல் என்பது அன்னாரது வருகையின் மூலம் அது நிறைவேறியது. அதாவது ஷரீஅத் இறங்கியதன் மூலம் அது முழுமையடைந்தது. இரண்டாவதாக, நேர்வழியை பரப்புவதை முழுமை செய்தல் என்பது, அன்னாரது இரண்டாவது வருகையின் மூலம் நிறைவேறியது.

ஏனென்றால், சூரா ஜுமுஆவில் வ ஆகரீன மின்ஹும் என்ற வசனம் அன்னாரது அருளின் மூலமாக இன்னொரு சமுதாயத்தை ஆயத்தம் செய்வது தொடர்பாக வழிகாட்டுகின்றது. அதிலிருந்து அன்னாரது வருகை இன்னொரு முறையும் இருக்கும் என்பது தெரிய வருகிறது. ஆனால் அந்த வருகை நிழல் வடிவில் இருக்கும். அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆக இந்த நேரம் நேர்வழியை பரப்புவதை முழுமையடையச் செய்வதற்கான நேரமாகும். மேலும் இது நிறைவேறியும் வருகின்றது. உதாரணமாக, பிரிண்டிங் பிரஸ் அதிகமாக இருப்பது, மேலும் அன்றாடம் இவற்றில் புதிய புதிய விஷயங்கள் உருவாகுவது, தபால் நிலையங்கள், இரயில், கப்பல், பத்திரிகை அச்சிடப்படுதல் ஆகிய இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு நகரத்தின் வடிவத்தை கொடுத்துள்ளது. ஆக இந்த முன்னேற்றமும் கூட பெருமானார் (ஸல்) அவர்களது முன்னேற்றமே ஆகும். ஏனென்றால் இதன் மூலமாகவே நேர்வழியைப் பரப்புவதை முழுமையடையச் செய்வதல் என்ற அன்னாரது பணி முழுமையடைகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 9,10)

அன்னார் கூறுகின்றார்கள்: அறிவுடைய மக்கள் இந்த அனைத்து விஷயங்களையும் ஒன்றிணைத்து சிந்தித்துப் பார்த்தால் நாம் எதைக் கூறுகின்றோமோ அது மேலோட்டமாக நிராகரிக்கக்கூடிய ஒன்றா? அல்லது இவை அனைத்திலும் மிகவும் சிந்தித்து செயல்பட வேண்டுமா? நாம் எந்த வாதத்தை வைக்கின்றோமோ அது நூற்றாண்டின் துவக்கத்தில் இருக்கிறதா? இல்லையா? நான் வரவில்லை என்றாலும் அறிவுடைய ஒருவர் வரக்கூடிய ஒருவரை தேட வேண்டும்.

ஏனென்றால் நூற்றாண்டின் ஆரம்பம் வந்து விட்டது. இப்போது அதிலிருந்து 20 வருடங்கள் கழிய இருக்கின்றது. மேலும் அதிகமாக கவலை கொண்டிருக்க வேண்டும். தற்போது இருக்கின்ற குழப்பமானது, எவர் ஒருவராவது நமது சீர்திருத்தத்திற்காக வர வேண்டும் என்று அழைப்புக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: கிறிஸ்தவர்கள் எந்த அளவுக்கு தீமையை பரப்பு உள்ளனர் என்றால் அதற்கு ஓர் எல்லையே இல்லை. மேலும் முஸ்லிம்களின் குழந்தைகளின் மீது இதன் எத்தகைய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றால் அதனைப் பார்த்து இவன் முஸ்லிமின் மகனே அல்ல என்று கூற வேண்டியது வருகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 13,14)

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையை கண்டறிவதன் வழி என்னவாக இருக்க வேண்டும்? எவ்வாறு உண்மையை தெரிந்து கொள்வது?

அன்னார் கூறுகின்றார்கள்: எங்களுக்கு உண்மையை வெளிப்படுத்திக் காட்டுவாயாக என்று இறைவனிடம் உங்கள் தொழுகையில் துஆ செய்யுங்கள். நான் திட நம்பிக்கை கொள்கின்றேன். அதாவது எவர் ஒருவர் காழ்ப்புணர்ச்சியை விட்டு விலகி, தூய்மையான உள்ளத்துடன் உண்மையை அறிந்து கொள்வதற்காக இறைவன் பக்கம் குனிவார் என்றால் பிறகு 40 நாட்கள் கூட கழிந்திருக்காது. அவருக்கு உண்மை வெளிப்பட்டு விடும். ஆனால் மிகக் குறைவானவர்களே இந்த வழிமுறைக்கேற்ப இறைவனிடம் தீர்ப்பு கேட்கின்றனர்.

மேலும் இவ்வாறு தமது குறைமதி, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இறைவனது நேசரை மறுத்து ஈமானை வீணாக்கி விடுகின்றனர். இறைநேசரை மறுப்பத்து அதன் தோற்றமாக இருக்கின்ற நபியை அவர் மறுக்கின்றார். இவ்வாறு நபியை மறுத்து இறைவனையும் மறுக்கக் கூடியவராக அவர் திகழ்கின்றார். பிறகு இவ்வாறு அவரது ஈமான் வீணாகி விடுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 16)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த சில மேற்கோள்களுக்குப் பிறகு நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னார் தொடர்பாக கூறியுள்ள சில கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: எதிர்ப்பில் முன்னேற்றம் ஏற்படும்போது ஜமாஅத்தும் முன்னேற்றமடைகின்றது. எதிர்ப்பு அதிகமாகும்போது அல்லாஹ்வின் அற்புதங்களும், உதவிகளும் அதிகமாகி விடுகின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக கூறுகின்றார்கள்: ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் எங்களுக்கு அதிகமான எதிர்ப்பு இருக்கின்றது என்று கூறினால் இது உங்களது முன்னேற்றத்திற்கான அறிகுறிகளாகும் என்று கூறுவார்கள். எங்கு எதிர்ப்பு இருக்கின்றதோ அங்கு ஜமாஅத் முன்னேற்றமடைகின்றது. ஏனென்றால் எதிர்ப்பின் காரணமாக பொது மக்களுக்கும் அமைப்பு தொடர்பாக தெரிய வருகின்றது. பிறகு அவர்களிடம் ஜமாஅத்தின் புத்தகங்களைப் படிப்பதற்கான ஆர்வம் ஏற்படுகின்றது. பிறகு அவர்கள் புத்தங்களைப் படிக்கும்போது உண்மை அவர்களது உள்ளத்தை ஈர்த்து விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருவர் வந்து அன்னாரிடம் பைஅத் செய்தார். பைஅத் பெற்ற பிறகு அன்னார் அவரிடம் உங்களுக்கு யார் தப்லீக் செய்தார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், எனக்கு மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிபே தப்லீக் செய்தார் என்று கூறினார். இவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிகப்பெரும் எதிரியாவார்.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் வியப்புடன் அது எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் மவ்லவி சாஹிபின் பத்திரிகையையும், புத்தங்கங்களையும் படித்து வந்தேன். அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக கடுமையான எழுதப்பட்டிருந்தது. ஒரு நாள், நாயே இந்த இயக்கத்தின் புத்தகத்தைப் பார்க்க வேண்டுமே என்ற எண்ணம் என்னிடத்தில் ஏற்பட்டது.

அதாவது இந்த அளவுக்கு எதிர்ப்பு இருக்கின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நூலையும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதையும் பார்க்க வேண்டும் என்று எண்ணினேன். பிறகு நான் இந்த புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்த பிறகு எனது உள்ளம் திறந்தது. நான் பைஅத் செய்ய ஆயத்தமாகி விட்டேன். ஆக எதிர்ப்பினால் ஏற்படும் முதல் பயன் என்னவென்றால் இறை இயக்கத்திற்கு முன்னேற்றம் கிடைக்கின்றது. மேலும் பலருக்கு நேர்வழி கிடைப்பதற்கான காரணியாக ஆகி விடுகின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 487)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு தொடர்பாக எடுத்துக் கூறியவாறு நபிமார்கள் தமக்கு ஏற்படுகின்ற எதிர்ப்பை எவ்வாறு எதிர் கொள்கின்றார்கள்? என்பது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், பழைய காலத்திலிருந்த எகிப்து அரசாங்கத்தின் உதாரணத்தை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

எகிப்து அரசாங்கம் தமது காலத்தில் மிகவும் வலுவான அரசாங்கமாக இருந்தது. மேலும் அதன் அரசனான ஃபிர்அவ்ன் தமது ஆற்றலின் மீது மிகுந்த பெருமை கொண்டிருந்தான். இத்தகைய அரசனுக்கு முன்னிலையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எந்த வலிமையும் ஆற்றலும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தபோதிலும் அவர்கள் அரசரிடம் சென்ற போது அரசன் அவர்களை அச்சமூட்டினான்; மிரட்டினான். மேலும் அன்னாரையும் அன்னாரது சமுதாயத்தையும் அழித்து விடுவேன் என்று கூறினான். நீங்கள் இதிலிருந்து வெளிவரவில்லை என்றால் உங்களையும் அழித்து விடுவேன் என்று கூறினான். ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறைவன் உலகத்திற்கு வழங்கிய தூதுச் செய்தியை நிச்சயமாக நான் எடுத்துக் கூறுவேன். உலகத்திலுள்ள எந்த சக்தியாலும் இதனைத் தடுக்க முடியாது என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதே நிலைதான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நிலையாகவும் இருந்தது. இதே நிலைதான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் நிலையாகவும் இருந்தது. மேலும் இப்படிப்பட்ட நிலையையே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் கண்டுள்ளோம். அனைத்து சமுதாயங்களும் அன்னாருக்கு எதிர்ப்பில் மூழ்கியிருந்தனர். அரசாங்கமும் கூட இத்தகைய நிலையில்தான் இருந்தது. கடைசி காலத்தில் இந்த நிலைபாட்டில் சிறிது குறைவு ஏற்பட்டது.

எவ்வாறிருப்பினும் சமுதாயங்கள் அன்னாரை எதிர்த்தன. சமுதாயத்தின் மார்க்கத் தலைவர்கள் அன்னாரை எதிர்த்தனர். மவ்லவி அன்னாரின் எதிரியாக இருந்தனர். ஆட்சியாளர்கள் அன்னாரின் எதிரியாக இருந்தனர். பொது மக்கள் அன்னாருக்கு எதிரியாக இருந்தனர். செல்வந்தர்கள் அன்னாருக்கு எதிரியாக இருந்தனர்.

எவ்வாறிருப்பினும் நாலாபுறமும் எதிர்ப்பின் ஒரு சூறாவழி காற்று வீசியது. மக்கள் அன்னாருக்கு புரிய வைத்தனர். சில நண்பர்களாகி அன்னாரிடம் நீங்கள் உங்களது வாதத்தில் ஏதாவது கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினர். சிலர் அன்னாரிடம் நீங்கள் இந்த இந்த விஷயத்தை விட்டால் பிறகு அனைவரும் உங்கள் ஜமாஅத்தில் இணைந்து விடுவார்கள் என்று கூறினர். ஆனால் அன்னார் அவர்களின் எவரது கூற்றையும் பொருட்படுத்தவில்லை.

மேலும் எப்போதும் தமது வாதத்தை அவர்கள் முன்வைத்து வந்தார்கள். இதனால் கூச்சல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அடி விழுந்து கொண்டே இருந்தது. கொல்லப்பட்டுக் கொண்டே இருந்தனர். இன்று வரை இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அன்னாரை எதிர்த்தவர்கள் எத்தகையவர்கள் என்றால் வெளிப்படையில் பார்க்கும்போது அதற்கெதிரில் அன்னார் ஒன்றுமற்றவர்களாகவே இருந்தார்கள். இருந்த போதிலும் அன்னார் தனது வாதத்தை செய்தே வந்தார்கள். எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது.

பல முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அதாவது நபியின் உதாரணம் ஒரு பைத்தியக்கார கிழவியைப் போன்றதாகும். அதாவது ஒரு ஊரிலுள்ள

மக்கள் கூறி வந்தனர். அந்த ஊரிலுள்ள கிழவி எப்போது வீட்டை விட்டு வெளியே வந்தாலும் அந்த ஊரிலுள்ள சிறுவர்கள் அந்த கிழயை ஏளனம் செய்வார்கள். அவளை ஏசிப் பேசுவார்கள். அந்த கிழவியும் அதற்குப் பதிலாக அந்த சிறுவர்களை ஏசிப் பேசியவாறு தீய துஆ செய்து வந்தாள்.

இறுதியில் ஒரு நாள் ஊரிலுள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, இந்த பெண் அநீதிக்கு ஆளானவள். ஆனால் நமது குழந்தைகள் இவளை தேவையில்லாமல் துன்புறுத்துகின்றனர். அநீதிக்குள்ளான நிலையில் இவள் அவர்களுக்காக தீய துஆ செய்கின்றாள். இவள் செய்கின்ற தீய துஆ ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் நாம் நமது குழந்தைகளை தடுத்து நிறுத்த வேண்டும். அதன் மூலமாக அவர்களும் இவளை துன்புறுத்த முடியாது. இவளும் தீய துஆ செய்ய முடியாது. இந்த ஆலோசனைக்குப் பிறகு அவர்கள், நாளை முதல் நமது குழந்தைகளை வீட்டில் பூட்டி வைப்போம். அவர்களை வெளியில் விட மாட்டோம் என்று முடிவெடுத்தனர். எனவே அடுத்த நாள் அனைவரும் தமது குழந்தைகளிடம் இன்றிலிருந்து வெளியே செல்லக் கூடாது என்று கூறி முன்னெச்சரிக்கையாக வீட்டை பூட்டு போட்டனர்.

காலைப்பொழுது விடிந்ததும் அந்த பைத்தியக்கார கிழவி தனது வழக்கத்திற்கேற்ப வீட்டை விட்டு வெளியே வந்தாள். சிறிது நேரம் வரை அவள் வீதிகளில் சுற்றித் திரிந்தாள். சில சமயங்களில் ஒரு வீதியிலும், சில நேரங்களில் வேறு வீதிகளிலும் சுற்றித் திரிந்தாள். ஆனால் எந்த சிறுவர்களும் அவளுக்கு தென்படவில்லை. முதலில் எத்தகைய நிலை அவளுக்கு இருந்தது என்றால், ஒருவன் அவளைப் பிடித்து இழுப்பான். இன்னொருவன் அவளை நுள்ளி விடுாவன். இன்னொருவன் அவளைத் தள்ளி விடுவான். வேறொருவன் அவளை ஏளனம் செய்வான்.

ஆனால் இன்று அவளுக்கு எந்த சிறுவனும் தென்படவில்லை. மதிய நேரம் வரை அவள் காத்திருந்தாள். ஆனால் மதியம் வரை எந்த சிறுவனும் வராததைக் கண்ட அவள் ஒவ்வொரு கடையாகச் சென்று அங்கிருப்பவர்களிடம், உங்கள் வீடு இடிந்து விழுந்து விட்டதா என்ன? குழந்தைகள் மரணித்து விட்டனரா? ஒருவரையும் காணவில்லையே? என்னவாயிற்று? என்று கேட்டாள்.

இவ்வாறு அவள் ஒவ்வொரு கடையாகச் சென்று இதைக் கூறியதைப் பார்த்த பிறகு அவர்கள், எவ்வாறிருப்பினும் அவள் ஏசிப் பேசுகிறாள். எனவே ஏன் நாம் தேவையில்லாமல் இவர்களை வீட்டில் அடைத்து வைக்க வேண்டும். அவர்களை விட்டு விடுங்கள். ஏனென்றால் எந்நிலையிலும் இவள் ஏசிப் பேசத் தான் செய்வாள் என்று கூறினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நபிமார்களின் நிலையும் இவ்வாறே இருக்கின்றது. உலகம் அவர்களை ஏளனம் செய்கின்றது. துன்பத்தை தருகின்றது. அவர்கள் மீது அநீதி இழைக்கின்றது. எந்த அளவுக்கு துன்பத்தை தருகின்றது என்றால் அவர்களுக்கு வாழ்க்கையைக் கழிப்பது கூட கடினமாகி விடுகிறது. ஒரு சாராரின் உள்ளங்களில், மக்கள் நம்மீது அநீதியிழைக்கின்றனர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்ற எண்ணம் உருவாகி விடுகிறது.

ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களாலும் உலகத்தை விட முடியாது. உலகம் அவர்களுக்கு துன்பத்தை தரவில்லை என்றாலும் அவர்கள் அவர்களிடம் செல்கின்றனர். ஏனென்றால் உலகம் அவர்கள் கூறுபவற்றை கேட்க வேண்டும்.

(குத்பாத்தே மஹ்மூது (ரலி) – தொகுதி 24 பக்கம் 272–274)

அது எவ்வாறு அவர்கள் கேட்டாலும் சரியே. பிறகு இவ்வாறு சில நல்ல மக்கள் கிடைக்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இளமைப் பருப நண்பரும், தொடர்பும் வைத்திருந்தார். அன்னாரது கட்டுரையை எப்போதும் புகழ்ந்து வந்தார். ஆனால் அன்னாரது வாதத்திற்குப் பிறகு நானே இவரை பிரபல்யமடையச் சென்தேன். இப்போது நான் இவரை அழிப்பேன் என்று கூறினார். அந்த காலத்தின் மதிப்புமிக்க மவ்லவியான முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஒருவரைக் குறித்து நான் அவரை அழித்து விடுவேன் என்று கூறி அவர் அழியாமல் இருப்பார் என்று யாரால் கற்பனை செய்து பார்க்க முடியும்? நிச்சயமாக அவர் ஆற்றல்மிக்கவராக இருந்தார். அவர் எதைக் கூறினாரோ அதை அவரால் செய்யயும் முடியும்.

இது தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உறவினர்களும் கூட அன்னாரிடம் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். சிலர் பத்திரிகைகளிலும் கூட, இவர் இவ்வாறு ஒரு வியாபாரம் செய்து வருகின்றார். இதன் பக்கம் யாரும் கவனம் செலுத்தக் கூடாது என்று செய்தியும் கொடுத்தனர். இவ்வாறு அவர்கள் முழு உலகிலும் இதனைப் பரப்ப விரும்பினர்.

பிறகு எனக்கு நினைவிலுள்ள விஷயமாகும். அதாவது இது தவிர அன்னாரது வீட்டு வேலை செய்பவர்களும் வீட்டு வேலையை செய்ய மாட்டோம் என்று கூறி விட்டனர். அன்னாரது பணியாளர்களும் கூட பணி செய்வதிலிருந்து நிராகரித்து விட்டனர். இதற்கான காரணம் எங்களது உறவினர்களே ஆவர். ஆக, நம்மவர்களும், அந்நியர்களும் இணைந்து அன்னாரை அழிக்க விரும்பினர்.

**(அல் ஃபஸல் 13 நவம்பர் 1940 பக்கம் 2,3 – தொகுதி 28 பக்கம் 258)**

ஆனால் நடந்து என்ன? இன்று அன்னாரது பெயர் உலகிலுள்ள 212 நாடுகளில் நினைவு கூறப்படுகின்றது. இது அன்னாரது உண்மைத்துவத்திற்கான ஆதாரம் இல்லை என்றால் வேறு என்ன?

பிறகு அன்னாரது உண்மை தொடர்பாக ஓர் அடையாளத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்: இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நமக்கிடையில் ஏற்படுத்தியுள்ளான். மேலும் அன்னாரது இருப்பு நமக்காக அடையாளமாகவும், வலுவான ஆதாரமாகவும் ஆகி விட்டது. எவர் ஒருவர் அன்னாருக்கு அருகில் அமர்ந்தாலும் அவருக்கு திருக்குர்ஆன் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் தென்படும். எதுவும் அவரை இஸ்லாத்தை விட்டு அகற்றுவதற்கு காரணமாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது கரம் தீன் வழக்கு தொடரப்பட்ட போது மாஜிஸ்டிரேட் இந்துவாக இருந்தார். ஆரியர்கள் அன்னாருக்கு ஏதாவதொரு தண்டனை வழங்க வேண்டும் என்று அவரைத் தூண்டினர். மேலும் தாம் அவ்வாறு செய்வதாக அவர் வாக்குறுதியும் கொடுத்தார். காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் இவ்விஷயத்தைக் கேட்டு அஞ்சினார்கள். வழக்கின் சந்தர்ப்பத்தின்போது அன்னார் குர்தாஸ்பூரில் தங்கிருந்தார்கள். அவர்கள் அன்னாரை சந்திக்க வந்தார்கள். மேலும் கூறினார்கள்: ஹுஸூர்! மிகவும் வருத்தத்திற்குறிய விஷயமாகும். ஆரியர்கள் மஜிஸ்டிரேட்டிடன் ஏதாவதொரு தண்டனை வழங்குவதற்காக வாக்குறுதி பெற்று விட்டர்கள்.

அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் படுத்திருந்தார்கள். பிறகு உடனே எழுந்து அமர்ந்தார்கள். பிறகு கூறினார்கள்: காஜா சாஹிப்! இறைவனின் சிங்கத்தின் மீது எவர் கை வைப்பார்? நான் இறைவனது சிங்கம் ஆவேன். கையை போட்டுத்தான் பார்க்கட்டுமே! என்று கூறினார்கள்.

பிறகு அவ்வாறே நடைபெற்றது. அந்த நீதிமன்றத்தில் இரண்டு மஜிஸ்டிரேட் இருந்தனர். அவர்களிடம் ஒன்றிற்குப் பிறகு மற்றொரு வழக்கு வந்தது. அவர்கள் இருவருக்கும் கடுமையான தண்டனை

கிடைத்தது. அன்னாருக்கு எதிராக வழங்கு தொடர விரும்பிய ஒருவரது வழக்கு தள்ளுபடியானது. இன்னொருவரின் மகன் நதியில் மூழ்கி மரணித்தான். மேலும் அவர் இதன் காரணமாகவே பைத்தியக்காரராகி விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்தினால் அவரிடம் எந்த அளவுக்கு தாக்கம் ஏற்பட்டது என்றால் ஒரு முறை நான் தில்லிக்கு சென்று கொண்டிருந்தேன். அவர் லூதியானாவின் இரயில் நிலையத்தில் என்னை சந்தித்தார். மிகுந்த வருத்தத்துடன் என்னிடம், அல்லாஹ் எனக்கு பொறுமையை மேற்கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்க துஆ செய்யுங்கள். என்னிடமிருந்து மிகப்பெரும் தவறுகள் நிகழ்ந்துள்ளது. எனது நிலை எப்படி உள்ளது என்றால் நான் பைத்தியக்காரனாகி விடக்கூடாது என்று அஞ்சுகின்றேன் என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகிறார்: எனக்கு இரண்டு மகன்கள். ஒருவன் இறந்து விட்டான். என்னையும் எனது இன்னொரு மகனையும் அல்லாஹ் அழிவிலிருந்து காப்பாற்ற துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

அன்னார் எழுதுகின்றார்கள்: இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றான, இறைவனது சிங்கத்தின் மீது எவர் கை வைப்பார்? என்பது நிறைவேறியது. இவ்வாறு ஆரியர்கள் தமது நோக்கத்தில் தோல்வியடைந்தனர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 359)

பிறகு அன்னார் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் ஒரு சுவாரஷ்யமான சம்பவமாகும். அன்னாருக்கு ஒரு நண்பர் இருந்தார்கள். அவர்கள் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் நண்பராகவும் இருந்தார்கள். அவர்களது பெயர் நிஸாமுத்தீன் ஆகும். அவர்கள் ஏழு முறை ஹஜ் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஆகிய இருவருடனும் நட்பு ரீதியான தொடர்பை வைத்திருந்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து தோன்றியதற்கான வாதத்தை செய்தபோது மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அன்னார் மீது குஃப்ர் ஃபத்வா வழங்கியதால் இவர்களது உள்ளத்திற்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது. ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது நேர்மையின் மீது இவர் மிகுந்த நம்பிக்கை இருந்தது. அவர் லூதியானாவில் வசித்து வந்தார்.

எதிர்க்கின்ற மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக ஏதேனும் கூறினால் அவர்களிடம் இவர் சண்டையிட்டவாறு, மிர்ஸா சாஹிபின் நிலையை சென்று பாருங்கள். அவர் மிகச் சிறந்த நேர்மையான மனிதர் ஆவார்கள். நான் அவர்களுடன் இருந்துள்ளேன். அவர்களிடம் திருக்குர்ஆனிலிருந்து ஏதாவதொரு விஷயத்தை புரிய வைத்தால் உடனடியாக அதை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகி விடுவார்கள். ஒருபோதும் ஏமாற்ற மாட்டார்கள். திருக்குர்ஆனிலிருந்து அவர்களது வாதம் தவறு என்று புரிய வைத்தால் அவர் உடனடியாக ஏற்றுக் கொள்வார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு பல முறை இந்த மக்களுடன் அவர் சண்டையிட்டுள்ளார்.

மேலும் அவர்களிடம் இவ்வாறும் கூறி வந்தார்கள். அதாவது நான் காதியான் சென்றால் அவர்கள் எவ்வாறு தமது வாதத்திலிருந்து தவ்பா செய்யாமல் இருக்கின்றார்கள் என்று பார்க்கின்றேன். நான் திருக்குர்ஆனைத் திறந்து அவர்கள் முன்னால் வைத்து திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்திற்குச் சென்ற வசனங்களை எடுத்துக் கூறினால் உடனடியாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அவர்கள் திருக்குர்ஆனின் விஷயத்தைக் கேட்ட பிறகு எதுவும் கூற மாட்டார்கள் என்பதை நான் நன்கு அறிந்துள்ளேன்.

இறுதியில் ஒரு நாள் அவர்களுக்கு லூதியானாவிலிருந்து காதியான் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. காதியான் வந்த உடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், தாங்கள் இஸ்லாத்தை விட்டு விட்டீர்களா? திருக்குர்ஆனை மறுக்கின்றீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், என்னால் திருக்குர்ஆனை விடவே முடியாது என்று கூறினார்கள்.

அதற்கு அவர், நான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்தில் இருக்கின்றார்கள் என்பதற்கான பல நூறு வசனங்களை உங்களிடம் காண்பித்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், பல நூறு வசனங்களையெல்லாம் வைக்க வேண்டாம். நீங்கள் ஒரேயொரு வசனத்தை மட்டும் காண்பித்தால் நான் ஏற்றுக் கொள்வேன் என்று கூறினார்கள்.

அதற்கு அவர், அல்ஹம்துலில்லாஹ். நான் இதனையே மக்களிடம் வாதம் செய்து வந்தேன். மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொள்ளச் செய்வது கஷ்டமான விஷயமல்ல. வெறுமனவே மக்கள் கூச்சல் இடுகின்றனர் என்று கூறியவாறு, பல நூறு வசனங்களுக்குப் பதில் நூறு வசனங்களை மட்டும் மஸீஹ் உயிரோடு இருப்பதற்கான ஆதாரத்தை வைத்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நீங்கள் ஒரு வசனத்தைக் காட்டினாலேயே நான் ஏற்றுக் கொள்வதாக கூறிவிட்டேனே. மேலும் எவ்வாறு நூறு வசனங்களின்படி செயல்படுவது அவசியமோ அவ்வாறே ஒவ்வொரு சொல்லின்படியும் செயல்படுவது அவசியமாகும்.

எனவே ஒன்று அல்லது நூறு என்ற கேள்வியே இல்லை என்று கூறினார்கள். பிறகு மீண்டும் அவர், நூறு இல்லையென்றாலும், ஐம்பதைக் காட்டினால் நீங்கள் உங்களது கூற்றை விட்டு விடுவீர்கள் அல்லவா? என்று கேட்டார். அதற்கு அன்னார் (அலை) அவர்கள், நான் ஒரு வசனத்தைக் காட்டினாலே போதும். நான் ஏற்றுக் கொள்வேன் என்று கூறிவிட்டேனே என்று மீண்டும் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவுக்கு உறுதியாக இதைக் கூறினார்கள் என்றால் அவருக்கு திருக்குர்ஆனில் இத்தனை வசனங்கள் இல்லாமல் இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. இறுதியில் அவர், சரி! 10 வசனங்களை நான் காட்டினால் நீங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார். அதற்கு அன்னார் சிரித்தவாறு, நான் முதலில் இருந்தே என்னுடைய கூற்றில் நிலைத்து நிற்கின்றேன். நீங்கள் ஒரேயொரு வசனத்தை மட்டும் காட்டுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர், சரி. நான் இப்போது செல்கின்றேன். நான்கு, ஐந்து நாட்களில் வருவேன். திரும்பி வந்து உங்களுக்கு திருக்குர்ஆனிலுள்ள வசனங்களை எடுத்துக் காட்டுவேன் என்று கூறினார்.

இன்றைய நாட்களில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி லாஹூரில் இருந்தால். ஹஸ்ரத் முதல் கலீஃபாவும் அங்கு தான் இருந்தார்கள். அப்போது இருவருக்ம் முபாஹிஸாவிற்கான நிபந்தனைகளை வகுத்துக் கொண்டிருந்தனர். முபாஹிஸாவின் தலைப்பு மஸீஹ் இறந்து விட்டார் என்பதாகும். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாக ஹதீஸ் இருக்கிறது.

எனவே ஹதிஸிலிருந்து ஏதாவதொரு விஷயம் நிரூபணமாகி விட்டால் அதனை திருக்குர்ஆனின் கூற்றாகவே கருத வேண்டும். எனவே ஹதீஸ் அடிப்படையிலேய மஸீஹின் மரணம் மற்றும் உயிரோடிருப்பது தொடர்பாக விவாதம் நடைபெற வேண்டும் என்று கூறினார்.

ஆனால் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள், ஹதீஸை மீது திருக்குர்ஆன் மேலோங்கி இருக்கிறது. எனவே திருக்குர்ஆன் மூலமாகவே தமது கருத்தை நிரூபிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இவ்வாறு இருவரும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியுடன் எப்படியாவது முபாஹிஸா நடைபெற வேண்டும் என்பதற்காக அவரது பல கூற்றுக்களை ஏற்றுக் கொண்டார்கள். இதனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, நான் எந்த நிபந்தனையை ஏற்க வைக்க விரும்புகிறேனோ அதை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதால் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் மியான் நிஸாமுத்தீன் சாஹிப் அங்கு வந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து விடைபெறு இவரிடம் வந்து, இப்போது எல்லா வாதத்தையும் நிறுத்துங்கள். நான் இப்போது ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபை சந்தித்து விட்டு வந்துள்ளேன். அவர்கள் இப்போது தவ்பா செய்வதற்காக ஆயத்தமாக அமர்ந்துள்ளார்கள். நான் உங்களுக்கும் நண்பனாவேன். மிர்ஸா சாஹிபிற்கும் நண்பனாவேன். எனவே இந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக எனக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் இயல்பில் நேர்மை இருக்கிறது என்பதை நான் அறிவேன். எனவே அவரிடத்தில் நான் சென்று திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்திற்கு சென்றதற்கான ஆதாரத்தைக் காண்பித்தால் மஸீஹ் உயிரோடு இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்களிடம் வாக்குறுதி வாங்கி விட்டு வந்துள்ளேன். எனவே நீங்கள் எனக்கு பத்து வசனங்களை கூறுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் இயல்பில் மிகுந்த கோபம் இருந்தது. அவசரத்தன்மை கொண்டவர். அவர், முட்டாளே! நீ எனது எல்லாப் பணிகளையும் சீர் குலைத்து விட்டாய். நான் இரண்டு மாதங்களாக வாதம் செய்து இவர்களை ஹதீஸின் பக்கம் கொண்டு வந்துள்ளேன். இப்போது நீ மீண்டும் திருக்குர்ஆனின் பக்கம் கொண்டு சென்று விட்டாய் என்று கூறினார்.

அதற்கு மியான் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள், பத்து வசனங்கள் கூட உங்களுக்கு ஆதரவாக இல்லையா? என்று கேட்டார். அதற்கு அவர் நீ அறிவற்ற மனிதன் ஆவாய். திருக்குர்ஆன் என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா? என்று கூறினார். இதைக் கேட்டு நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள், பிறகு திருக்குர்ஆனி எங்கு இருக்கிறதோ அங்குதான் நான் இருப்பேன் என்று கூறி விட்டு காதியான் வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். இதுவே இவர்களது பைஅத் சம்பவமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: பாருங்கள். திருக்குர்ஆன் மீது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை இருந்தது. அன்னார் மிகுந்த நம்பிக்கையுடன் திருக்குர்ஆன் எனக்கு எதிராக இருக்க முடியாது என்று கூறி வந்தார்கள். இதன் பொருள், திருக்குர்ஆனுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு ஏதோ குறிப்பான தொடர்பு இருந்தது என்றோ அல்லது அதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் குறிப்பான தொடர்பு இருக்கிறது என்பதல்ல. மாறாக, திருக்குர்ஆன் உண்மையின் வழியைக் காட்டுகின்றது. எவர் உண்மையில் இருப்பாரோ அவருக்கு அது உதவி செய்யும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தாம் உண்மையில் இருக்கின்றோம் என்ற நம்பிக்கை இருந்தது. எனவே திருக்குர்ஆனும் அன்னாருடன் இருந்தது. இதன் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எனது ஏதாவதொரு வாதம் திருக்குர்ஆனுக்கு ஏற்ப இருக்கவில்லை என்றால் நான் அதனை குப்பையில் தூக்கி எறிந்து விடுவேன் என்று கூறி வந்தார்கள். இதன் பொருள் அன்னாருக்கு தன்து வாதம் தொடர்பான சந்தேகம் இருந்தது என்பதல்ல. மாறாக, இதைக் கூறக் காரணம், திருக்குர்ஆன் என்னை உண்மைப்படுத்தும் என்ற நம்பிக்கை அன்னாருக்கு இருந்தது. இந்த நம்பிக்கைதான் நம்மை உலகத்தில் வெற்றி பெறச் செய்தது.

(குத்பாத்தே மஹ்மூது (ரலி), தொகுதி 13 பக்கம் 416–418)

மேலும் இன்றும் நமது வெற்றிகளுக்கும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக தூதுச் செய்தியை உலகில் கொண்டு சேர்ப்பதற்கான வழியாகும். மேலும் நிச்சயமாக திருக்குர்ஆன் நம்முடனே இருக்கிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனது வாக்குறுதிகள் உண்மையானதாகும். அவன் தனது வாக்குறுதிக்கேற்ப உலகத்தில் ஒரு எச்சரிக்கையாளரை அனுப்பினான். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் நிச்சயமாக அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் வலுவான தாக்குதல் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான். நான் உண்மையாகவே கூறுகின்றேன். இறைவனது வாக்குறுதிக்கேற்ப நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்துள்ளேன். விரும்பினால் ஏற்றுக் கொள்ளுங்கள். விரும்பினால் நிராகரித்து விடுங்கள். ஆனால் நீங்கள் நிராகரிப்பதனால் எதுவும் நடக்காது. இறைவன் எதை விரும்பினானோ அது நடந்தே துரும். ஏனென்றால் இறைவன் முதலிலேயே பராஹீனே அஹ்மதிய்யாவில் கூறி விட்டான்.

صَدَقَ اللّٰهُ وَرَسُوْلُهٗ وَكَانَ وَعْدًا مَّفْعُوْلًا அதாவது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் எதைக் கூறினார்களோ அது உண்மையானது. மேலும் இறைவனது கட்டளை முழுமை ஆனது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 206)

இப்போது நான் கடந்த ஜுமுஆ அன்று நியூஸிலாந்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக சிறிது கூற விரும்புகின்றேன். கடந்த ஜுமுஆ அன்றே கூறவேண்டியது. ஆனால் நினைவில் இருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் அதற்குப் பிறகு நான் ஒரு பிரஸ் ரிலீஸ் வழங்கியிருந்தேன். ஜமாஅத் சார்பாக இதற்காக இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பல பாவமற்ற, ஒன்றும் அறியாத மற்றும் குழந்தைகள் மார்க்க மற்றும் சமுதாயத பகைமையின் காரணமாக உயிரை அர்ப்பணித்துள்ளனர். ஷஹீதாகியுள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக. கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களுக்கும் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக.

நியூஸிலாந்து அரசாங்கம் குறிப்பாக பிரதமர் மிக உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் அரசாங்கத்திற்குரிய உரிமையை செலுத்திலுள்ளார்கள். அவர்கள் தமக்கே உரிய முன்மாரியாவார்கள். முஸ்லிம் அரசாங்கமும் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும். மேலும் மார்க்க பகைமையை முடிவுக்கு கொண்டு வர தமது பங்கை ஆற்ற வேண்டும். அங்குள்ள பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

இன்று ஜுமுஆ அன்று ரேடியா மற்றும் தொலைக்காட்சியில் இந்த அறிவிப்பையும் செய்துள்ளார்கள். அதாவது நாம் ஜுமுஆ நாளன்று முஸ்லிம்களுடன் நட்பு ரீதியில் நடக்கும் வகையில் அவர்களது பாங்கை தொலைக்காட்சியிலும், ரேடியோவிலும் கொடுக்கப்படும். முஸ்லிம் அல்லாத பெண்களும், கிறித்தவ பெண்களும் நட்புறவை வெளிப்படுத்தும் விதமாக தலையில் ஸ்கார்ஃப் மற்றும் துபட்டாவை அணிவதாக அறிவித்துள்ளார்கள். அல்லாஹ் இவர்களது இந்த நன்மையை ஏற்றுக் கொண்டவாறு இவர்களுக்கு உண்மையை அடையாளங்கண்டு கொள்வதற்கு

நற்பாக்கியத்தை வழங்குவானாக. பள்ளிவாசலிருந்த அதிகமான முஸ்லிம்களை அந்த அநீதியிழைக்கும் கொலைக்காரன் ஷஹீதாக்கி விட்டான். ஒரு பெண்மணியின் நேர்காணல் வந்து கொண்டிருந்தது. அந்த பெண்மணி மிகுந்த பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களது கணவரும், 21 வயதுமிக்க மகனும் இதில் உயிரை அர்ப்பணித்தார்கள்.

அவர்கள் மக்களுக்கு உதவி செய்தவாறு தமது உயிரைத் துறந்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும் ஒரு நன்மையை வேண்டி ஒரு நோக்கத்திற்காக உயிரைத் துறந்துள்ளார்கள். அல்லாஹ் இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இது மிகவும் வருத்தத்திற்குரிய சம்பவமாகும். அங்குள்ள முஸ்லிம்கள் மிகுந்த பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். இதுவே ஒரு முஸ்லிமிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய வெளிப்பாட்டையே ஒரு முஸ்லிம் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் சில தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள், இதற்கு பழிவாங்குவோம் என்று அறிவிப்புச் செய்துள்ளார்கள். இது மிகவும் தீய விஷயமாகும். இவ்வாறு எதிர்ப்பு நீண்டு கொண்டே செல்லும்.

அல்லாஹ் இஸ்லாத்திற்குள் இருக்கின்ற தீவிரவாத அமைப்பை முடிவுக்கு கொண்டு வருவானாக. மேலும் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அழகிய போதனையை உலகில் பரப்புவானாக. மேலும் முஸ்லிம்களுக்கும் அல்லாஹ் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. இவ்வாறு ஒன்றாகி உலகத்தில் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அழகிய போதனையை பரப்ப முடியும்.

தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா, காதியானைச் சார்ந்த மவ்லானா குர்ஷீத் அன்வர் சாஹிப் வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீதுடையதாகும். 19 மார்ச் அன்று தமது 73 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார்கள். ஒரு நீண்ட காலமாக கேன்ஸர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் மிகுந்த பொறுமை மற்றும் தைரியத்துடன் அன்னார் இந்த நோயை எதிர்கொண்டார்கள். இந்த நோயை பொறுத்துக் கொண்டார்கள். கடுமையான நோய் மற்றும் பலவீனம் இருந்த பிறகும் தனது கடமையை நிறைவேற்றுவதில் அன்னார் எந்த குறையையும் வைக்கவில்லை. தொடர்ச்சியாக அலுவலகத்திற்கு வருவார்கள். மாறாக, தமது வக்ஃபை இறுதி மூச்சு வரை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்யப்படுமோ செய்தார்கள். மாறாக, உரிமையை செலுத்தும் வகையில் அதன் உரிமையை செலுத்தியுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

மர்ஹூம் அப்துல் அஸீஸ் சாஹிப் தர்வேஷ் காதியான் மற்றும் ரயீஸா பேகம் சாஹிபா ஆகியோரது மகனாவார்கள். பின்டி பட்யாவைச் சார்ந்தவர். அன்னாரது குடும்பத்தில் அன்னாருக்கே முதலாவதாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. பைஅத்திற்குப் பிறகு அன்னாரது பாட்டனார் கடுமையாக எதிர்த்தார்கள். இதனால் அவர்கள் அங்கிருந்து காதியான் ஹிஜ்ரத் செய்தார்கள். மேலும் இங்கேயே நிரந்தரமாக தங்கினார்கள். தமது இளமைப் பருவத்தில் கண்ணியமிக்க சஹாபாக்கள் மற்றும் காதியானின் தர்வேஷ்களின் நெருக்கத்திலேயே கழித்தார்கள்.

தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் மெட்ரிக் முடித்தார்கள். பிறகு மத்ரஸா அஹ்மதிய்யாவிற்கு சென்றார்கள். 1967 ஆம் ஆண்டு மத்ரஸா அஹ்மதிய்யா காதியானில் மவ்லவி பட்டத்தைப் பெற்றார்கள். காதியான் மத்ரஸா அஹ்மதிய்யாவிலேயே முதல் போஸ்டிங் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். 1982 ல் மேனேஜர் பத்ராக நியமிக்கப்பட்டார்கள். சில காலம் பத்ர் பத்திரியையின் ஆசிரியராகவும் இருந்தார்கள். 1989 ஆம் ஆண்டு நாஸிம் இர்ஷாத் வக்ஃபே ஜதீது காதியான் என்ற அடிப்படையில் தொண்டாற்றினார்கள். இவ்வாறே நாஸிப் நாஸிர் இஷாஅத், சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத், நாயிப் நாஸிர் பைத்துல் மால் ஆமதாகவும் தொண்டாற்றியுள்ளார்கள்.

2006 ஆம் ஆண்டு நான் அன்னாரை வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீதான நியமனம் செய்தேன். இந்த பொறுப்பை அன்னார் தமது மரணம் வரை சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்கான நற்பேற்றை பெற்றார்கள். இவ்வாறே பல முக்கிய தலைமையக கமிட்டியின் சதராகவும், உறுப்பினராகவும் இருந்துள்ளார்கள். அமைப்பு ரீதியான ஏற்பாடுகளை நிர்வகிக்கும் திறமை பெற்றவர். பரந்த உள்ளத்துடனும், அர்ப்பணித்தலுடனும் தமது கடமையை மிகச் சிறந்த முறையில் அன்னார் நிறைவேற்றினார்கள். தஹ்ரீகே ஜதீது சந்தாவிலும் இந்தியாவின் நிலையை முன்னுக்கு கொண்டு வருவதில் மிகச் சிறந்த முயற்சியை செய்தார்கள். மிக பின்தங்கி இருந்தது. அல்லாஹ்வின் அருளால் முன்னே கொண்டு வந்தார்கள்.

இயக்கத்தின் பணத்தை மிகுந்த கவனத்துடன் செலவு செய்து வந்தார்கள். சிறந்த அறிவையும் பெற்றிருந்தார்கள். அன்னாரது கட்டுரைகள் மிகச் சிறப்பாக இருக்கும். பல வருடங்கள் வரை பத்ர் பத்திரிகையின் வெற்றிக்காக சிறந்த நிர்வாகத்தை செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். பத்ர் பத்திரிகையில் அன்னாரது கட்டுரைகள் மார்க்க ஞானங்களை உள்ளடக்கியதாகவும், உருது மொழியின் மிகச்சிறந்த ஞானமிக்கதாகவும் இருந்தது. ஹைதராபாத் தக்கனில் ஒரு போட்டி நடைபெற்று வந்தது. அதாவது ஒற்றுமையை ஏற்படுத்துதல் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது. பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பாக அதற்கும் அன்னார் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்கள். மேலும் அது முதல் இடத்தை பெற்றது. இது அன்னார் இளைஞராக இருந்தபோது நடந்த விஷயமாகும். ஏறக்குரைய 40 வருடத்திற்கு முன்னுள்ள விஷயமாகும்.

அன்னார் பல நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். விருந்தோம்பல் செய்வதிலும், அனைவருடன் பழகுவதிலும், கடின உழைப்பிலும் சிறந்து விளங்கினார்கள். ஆண்டு மாநாட்டிற்கு முன்பாகவே விருந்தினர்களின் வருகைக்காக பெரும் முயற்சி செய்தவாறு அதற்காக ஆயத்தம் செய்து வந்தார்கள். குறைவான அளவில் ஏற்பாடுகள் இருந்தும் மிகச் சிறந்த முறையில் விருந்தினர்களுக்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். சிறந்த கருத்துக்களை தெரிவிக்கக் கூடியவர். ஏழைகளை கருத்தில் கொள்பவர். உயர் அதிகாரிகளுக்கு மிகவும் கட்டுப்பட்டு நடந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பை கொண்டிருந்தார்கள். அன்னார் 52 வருடங்கள் வரை தொண்டாற்றியுள்ளார்கள்.

அன்னாருக்கு 4 மகள்கள் 1 மகன் இருக்கின்றனர். ஒரு மகன் இங்கிருந்தார்கள். ஒரு மகள் அமெரிக்காவிலும், காதியானிலும் இருக்கின்றனர்.

அன்னாரது மருமகன் காலித் அஹ்மது ஆலா தீன் சாஹிப் எழுதுகின்றார்கள்: நோயுற்றிருந்த காலத்தில் ஓய்வெடுக்கும் படி அவர்களிடம் எப்போது நான் கூறினாலும், அன்னார் என்னிடம், எனது கடைசி மூச்சு வரை தொண்டாற்றியவாறு அல்லாஹ்விடம் செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்று கூறி வந்தார்கள். மேலும் இந்த உடன்படிக்கையை அன்னார் செலுத்தினார்கள்.

அன்னாரது நாயிப் சத்ர் மஜ்லிஸ் தஹ்ரீகே ஜதீது அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னாருடன் மாணவப் பருவத்திலிருந்து எனக்கு தொடர்பு இருக்கின்றது. எனக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னாருடன் பணி செய்ய நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. நாயிப் நாஸிர் பைத்துல் மாலாக நியமிக்கப்பட்டார்கள். அப்போது அன்னார் என்னுடன் ஒரு நீண்ட காலம் வரை மிகவும் சிறப்பாக பணியாற்றினார்கள். கட்டுப்பட்டு நடப்பவர், கடின உழைப்பு செய்பவர் ஆவார். பொருளாதார விவகாரங்களில் மிக ஆழமான பார்வை வைத்திருந்தார்கள். தஹ்ரீகே ஜதீது பொறுப்பு இவர்களுக்கு

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 25 April 2019 Issue No. 17

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொடுக்கப்பட்ட போது பட்ஜெட் சில லட்சங்களாக இருந்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் பல கோடி ஆகும்.

அல்லாஹ் இவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக. இவர்களது குழந்தைகளுக்கும் இவர்களது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா ஃபிஜியின் நாயிப் அமீரான மதிப்பிற்குரிய தாஹிர் ஹுஸைன் முன்ஷி சாஹிப் அவர்களுடையதாகும். 5 மார்ச் அன்று தமது 72 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

ஃபிஜீ ஜமாஅத்தின் நீண்ட கால தொண்டர் ஆவார். நீண்ட காலமாக துணை ஆமீராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார். நேர்மையானவர், துஆ செய்யும் பழக்கத்தை உடையவர், கலப்பற்ற மற்றும் கண்ணியமிகு நபராவார். அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார். சொத்துக்குரிய பங்கை தமது வாழ்நாளிலேயே செலுத்தி விட்டார். ஒரு மகனையும், ஒரு மகளையும் நினைவாக அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். இந்த இரண்டு குழந்தைகளும் அஹ்மதி கிடையாது.

அன்னார் அல்லாஹ்வின் அருளால் ஃபிஜியின் கல்வித் துறையில் சிறந்த பெறரை பெற்றுள்ளார்கள். காலேஜின் பிரின்ஸ்பலாகவும், மினிஸ்ட்ரி ஆஃப் எஜுகேஷனில் செகன்ரி பிரின்ஸிபல் எஜுகேஷன் அதிகாரியாகவும் இருந்துள்ளார்கள். பிறகு முன்னேற்றம் கிடைத்ததுழு டெப்ரி டைரக்டர் எஜுகேஷனாக நியமிக்கப்பட்டார்கள்.1999 ல் இந்த பதவியில் இருக்கும்போது பணி நிறைவு பெற்றார்கள். அரசாங்கள் இவர்களை மீண்டும் பணியில் நியமித்தது. பிறகு நோய் வாய்ப்பட்டதன் காரணமாக அங்கிருந்து ஓய்வு பெற்றார்கள்.

அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக நஸ்ர்பாங்காவின் சத்ர் ஹாமித் ஹஸன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: முன்ஷி சாஹிபின் முதல் போஸ்டிங் 1986 ஆம் ஆண்டு நஸ்ர்பாங்காவின் பிராயிமெரி ஸ்கூலில் கிடைத்தது. நான் அப்போது பள்ளிக்கூடத்தின் செகரட்டரியாக இருந்தேன். எனவே அவர்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. நாங்கள் பெரும்பாலான நேரங்கள் ஒன்றாகவே கழித்துள்ளோம். ஜமாஅத்திற்கு எதிராக இருந்த போதிலும் அஹ்மதிய்யத் தொடர்பான விஷயங்கள் கேட்டு வந்தார்கள். வாதம் செய்து வந்தார்கள். முன்ஷி சாஹிப் தமது மல்லவியை வாதம் செய்தவற்காக அழைப்பார். ஆனால் அவர் மறுத்து விடுவார். எனவே அன்னாருக்கு இதனால் வருத்தம் ஏற்பட்டது. பிறகு அல்லாஹ் அவர்கள் மீது அருள் செய்தான். அன்னாருக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்கினான்.

ஹாமிர் ஹுஸைன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை முன்ஷி சாஹிப் காதியானிலிருந்து திரும்பி வந்ததும் என்னிடம், நான் பைத்துல் துஆவில் உங்களுக்காக அதிகமாக துஆ செய்தேன். அதாவது அல்லாஹ் உங்கள் மூலமாக என்னை இந்த இடத்திற்கு கொண்டு சேர்த்துள்ளான். அதாவது அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்கினான். எனவே பைத்துத் தஆ சென்று அவர்களுக்காக துஆ செய்து கொண்டே இருந்தார்கள். அதாவது அவர் என்மீது பெரும் பேருபகாரம் செய்துள்ளார் என்று துஆ செய்தார்கள்.

அன்பிற்குரியவர்களுக்காக இப்படிப்பட்ட துஆ செய்வது என்பது ஓர் அஹ்மதிக்கே இவ்வாறான எண்ணம் தோன்றும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னார் ஃபிஜியின் துணை அமீராக நியமித்தார்கள்.

நயீம் இக்பால் சாஹிப் முபல்லிக் எழுதுகின்றார்கள்: கலப்பற்ற நபராவார். மற்றவர்களுக்கும் கிலாஃபத்திற்கு கண்ணியமளிப்பது மற்றும் கட்டுப்படுவதற்கு கூறி வருவார்கள். தமது முன்மாதிரியையும் எப்போதும் வெளிப்படுத்தி வந்தார்கள். ஏதாவதொரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் காலத்தின் கலீஃபாவின் கருத்து இது என்று கூறப்பட்டால் பிறகு தனது கருத்தை விட்டு விடுவார்கள்.

மூன்றாவது ஜனாஸா மாலியைச் சார்ந்த மூஸா ஸஸ்கோ சாஹிப் அவர்களுடையதாகும். 15 பிப்ரவரி அன்று வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார் இராணுவத்தின் கமாண்டர் ஆவார். ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் அன்னாரூக்கு ஜமாஅத்தின் ஒரு நாளிதழ் மூலமாக ஏற்பட்டது. இதற்குப் பிறகு அன்னார் வஸ்காஸோ ரீஜனின் முபல்லிகுடன் தொடர்ச்சியாக தொடர்பில் இருந்தார். 2012 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார். 2013 ஆம் ஆண்டு வஸ்காஸே நகரில் ஜமாஅத்தின் வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் டைரக்டராகவும், அதே வருடத்தில் சத்ர் ஜமாஅத்தாகவும் நியமிக்கப்பட்டார்கள். வானொலி மையம் நிறுவப்பட்ட பிறகு அங்கு பெரும் எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டியது வந்தது.

அன்னார் பெரும் ஞானத்துடனும், பொறுமையுடனும் நிலைமைகளை எதிர்கொண்டார்கள். மேலும் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டார்கள். சம்பந்தப்பட்ட துறையை தொடர்பு கொண்டு ஜமாஅத்தின் அறிமுகத்தை செய்தார்கள். அதே போன்று 2016 ஆம் ஆண்டிலிருந்து தேசிய செயற்குழுவில் வெளியுரவுச் செயலரான தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். பைஅத்திற்குப் பிறகு தன்னையே அன்னார் ஜமாஅத்தின் பணிகளுக்காக அர்ப்பணித்து விட்டார்கள். ஜமாஅத்தான தொழுகை மட்டுமின்றி தொடர்ச்சியாக தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வந்தார்கள். கலப்பற்ற நபராவார். கிலாஃபத்தோடு அளவு கடந்த அன்பு இருந்தது. கிலாஃபத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் லெப்பைக் என்று கூறுவதில் முன்னிலையில் இருந்தார்கள்.

தன்னுடைய நினைவாக இரண்டு மனைவிகளையும், பத்து மகள்களையும், ஐந்து மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாரது அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரது சந்ததிகளுக்கும் அன்னாரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. முன்ஷி சாஹிபின் குழந்தைகள் அஹ்மதிகள் கிடையாது. அல்லாஹ் அவர்களுக்கும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து....

அவன் மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிகின்ற மிகப் பெரியவனும் மிக மேலானவனும் ஆவான்.
(13:10)

**:.பைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad